(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 51.]

பாராளுமன்றம்

ஒழுங்குப் பத்திரம்

2019 ஏப்ரல் 02 செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

5/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 -2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் ஆரம்பிக்கப்பட்ட கிராம எழுச்சி வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த வீடமைப்புக் கருத்திட்டங்களின் வீடு பெறுனர்களை தெரிவு செய்வதற்கு பின்பற்றப்பட்ட முறையியல் யாது;

(iii) குறிப்பிட்ட கருத்திட்டங்கள் ஊடாக பயனாளிகளாக நிவாரணம் கிடைத்தோரின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஊடாக நாட்டில் வீடற்ற மக்களுக்காக போதியளவு ஒத்துழைப்பினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

117/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தம்பதிவ யாத்திரைகளை ஏற்பாடு செய்ய அனுமதி பெற்றுள்ள நிறுவனங்கள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் ஆட்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தம்பதிவ யாத்திரைகளின் போது மரணித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு மரணித்துள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி ஆட்களை தம்பதிவவுக்கு அழைத்துச்சென்ற நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(vi) இவ்வாறு மரணித்தவர்களின் குடும்பங்களது நலன்புரிக்காக அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

410/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அமைச்சரவை நியமித்த நிலையியற் பெறுகைக் குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தை புறத்தொதுக்கி முதலாவது சந்தர்ப்பத்தில் நிராகரிக்கப்பட்ட கொள்கலன்களில் பொருத்தப்பட்ட 50 மின் பிறப்பாக்கிகளை நிறுவுவதற்கான இரண்டு விலைகூறுனர்களை மீண்டும் மீள்மதிப்பீடு செய்யுமாறு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை வேண்டிக்கொண்டதா என்பதையும்;

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அதன் 2017.07.12 ஆம் தேதிய அறிக்கையில் Senok Trade Combine Pvt. Ltd மிகப் பொருத்தமான மற்றும் பதில் நடவடிக்கைக்குரிய ஆகக் குறைந்த விலைகூறுனர் என்று இரண்டாம் தடவையாகவும் விதந்துரைத்ததா என்பதையும்;

(iii) அமைச்சரவை அங்கீகாரத்தினூடாக அமைச்சரவை நியமித்த நிலையியற் பெறுகைக் குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை புறத்தொதுக்கி கேள்விப் பத்திரத்தை 2017.07.31 ஆம் திகதி இந்தியாவின் Sterling & Wilson என்ற நிறுவனத்துக்கு வழங்கியதா என்பதையும்;

(iv) சனாதிபதி செயலகத்திலுள்ள பெறுகை மேன்முறையீட்டுச் சபைக்கு Senok Trade Combine Pvt. Ltd மேன்முறையீடொன்றை செய்ததா என்பதையும்;

(v) Trade Combine Pvt. Ltd கம்பனியானது ஏற்கனவே நிறுவுவதற்கான பூச்சிய ஆகுசெலவை அதன் கேள்விப்பத்திரத்தில் உள்ளடக்கியுள்ள அதேவேளை, நிறுவுவதற்கான ஆகுசெலவைக் கருத்தில்கொண்டு Sterling & Wilson மற்றும் கொரியா நிறுவனம் ஆகியவற்றின் விலைக்கேள்வியை மீள்பரிசீலனை செய்யுமாறு அமைச்சும் பெறுகை மேன்முறையீட்டுச் சபையும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை வேண்டிக்கொண்டதற்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

479/ ' 19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான ஹந்தானை தோட்டத்தின் தேயிலைக் கொழுந்து உற்பத்தி ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உற்பத்திகளின் விற்பனையின் மூலம் வருடாந்தம் கிடைத்த தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) 2018.06.30 ஆம் திகதியளவில் தேயிலைக் கொழுந்து விற்பனையின் மூலம் கிடைக்க வேண்டிய முழுத் தொகையும் மக்கள் தோட்ட அபவிருத்திச் சபைக்கு கிடைத்துள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், நிலுவைத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

675/ ' 1 9

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலாக் கைத்தெழில் தொடர்பாக வருடத்திற்கு 2.5 மில்லியன் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை அழைக்கின்ற தேசிய இலக்கொன்று இருக்கின்றதென்பதையும்;

(ii) இலங்கைக்கு வருகின்ற கூடுதலான சுற்றுலா பயணிகள் கடற்கரை வலயங்களை பார்வையிட வருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அது தொடர்பாக அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) இனங்காணப்பட்டுள்ள கடற்கரை சார்ந்த சுற்றுலா வலயங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி சுற்றுலா கரையோர வலயங்களை துரிதமாக தாபிப்பது எவ்வாறென்பதையும்;

(iv) இது தெடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வாறு ஒரு சுற்றுலா வலயத்தை மேம்படுத்த செலவாகும் பணத்தொகை யாதென்பதையும்;

(ii) ஏதேனும் கடற்கரை வலயமொன்று சுற்றுலா கடற்கரை வலயமொன்றாக விதந்துரைக்கப்படும் சான்றிதழை பெற எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

755/ '19

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,— ஆரம்பக் கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 - 2018 ஆண்டு வரையில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(iii) இலங்கைக்கு மிளகு இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனின், இவ்விறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கிய உத்தியோகத்தர் மற்றும் இறக்குமதியாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் வருடாந்த மிளகு உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(ii) 2010 தொடக்கம் 2018 ஆண்டுவரை உலக சந்தையில் உச்ச மிளகு விலை ஒவ்வொரு ஆண்டின் படி வெவ்வேறாக யாதென்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

757/ '18

கௌரவ ரொஷான் ரணசிங்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2019.01.31 வரையான காலத்தில் வரையறுக்கப்பட்ட GSMB — தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியினூடாக மனம்பிட்டி மணல் அகழ்வு துறையினால் விநியோகிக்கப்பட்ட மணல் கியுப்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) GSMB கம்பனியின் ஊடாக நாளாந்தம் மணல் விநியோகிக்கும் முன்னுரிமை (டோக்கன் வழங்குதல்) எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) GSMB கம்பனி மூலமாக மனம்பிட்டி மணல் அகழ்வு துறை சார்பில் நாளாந்தம் மற்றும் மாதாந்தம் கிடைக்கும் அரசிற்கான வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) 2013 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையில் GSMB கம்பனி மூலமாக அரசாங்கத்திற்கு கிடைத்த மொத்த வருமானம் ஒவ்வொரு ஆண்டின் படி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொகை வைப்பிலிடப்பட்ட கணக்கு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

770/ '19

கௌரவ சாந்த பண்டார,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மாகாண சபைகளில், உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்ததன் காரணமாக தற்போது கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) கலைக்கப்பட்டுள்ள (உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்துள்ள) மாகாண சபைகள் கலைக்கப்பட்டது முதல் கடந்துள்ள காலப்பகுதி வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கு மேலதிகமாக, எஞ்சியுள்ள மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைவதற்கு உள்ள காலப்பகுதி வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) கலைக்கப்பட்டுள்ள மேற்படி மாகாண சபைகளின் தேர்தலை நடாத்தி, அம் மாகாண சபைகளை தொழிற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பார?

(ஆ) இன்றேல், ஏன்?

பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் (இல.1),— 2019 சனவரி 24 ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினால் தடைபெறாமல், 2019 மார்ச் 28 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு பின்வரும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் பெயர்கள்,—

(i) “நிதி மற்றும் வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு”, “நிதி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்;

(ii) “தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு”, “தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்;

(iii) “கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு”, “கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்.

மீளப் பெயரிடப்படுதல் வேண்டும்.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் (இல. 2),— 112(1) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் 2019 மார்ச் 28 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவென நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, ஒவ்வோர் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும், உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் அதன் தவிசாளராகவும், அதன் இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறிப்பிடப்படும் வேறு ஐந்து (05) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

மேற்படி ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினதும் கூட்ட நடப்பெண் மூன்று (03) உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

3.

பாராளுமன்ற சபை முதல்வர்,— அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் (இல. 3),— 112(1) ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் மற்றும் 2019 சனவரி 24 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேணைகளினால் தடைபெறாமல் 2019 மார்ச் 28 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு பின்வரும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர் அல்லது அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் அதன் தவிசாளராகவும், அதன் இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறிப்பிடப்படும் வேறு ஏழு (07) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக:—

(i) பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(ii) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழு

(iii) தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(iv) சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(v) புத்தசாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(vi) நிதி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(vii) நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(viii) வெளிநாட்டலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(ix) சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(x) மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xi) உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xii) கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xiii) மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xiv) பெருந்தோட்ட கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xv) கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xvi) நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xvii) பொது நிருவாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xviii) வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xix) போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xx) நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xxi) கல்வி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xxii) துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xxiii) தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xxiv) அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தகம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு;

(xxv) தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசைனக் குழு; மற்றும்

(xxvi) விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசைனக் குழு.

பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இருபத்திரெண்டாவது நாள்) — குழு (முன்னேற்றம், ஏப்ரல் 01).

* 2.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரின் கீழ் வாகனம் வெளியேற்றும் மாசுத் தரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/ தரங்கள் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 25 ஆம் திகதிய 2107/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 2019.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2012),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2017.11.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 4.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 5.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 6.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு ஆகியவற்றின் கீழ் 2017.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.02.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 7.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமைய 2018.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 8.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2018.07.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 9.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 31 வது வாசகத்தின் கீழ் 2018.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை முதலீட்டுச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 10.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 11.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 14-1A பிரிவிற்கமைய 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.05.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 12.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 14-1A பிரிவிற்கமைய 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.05.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) உட்பிரிவிற்கமைய பிரிவிற்கமைய, 2018.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 14.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(இ) ஆம் பிரிவிற்கமைய 2017.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2017.12.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 15.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவிற்கமைய, 2016.09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2017.05.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 16.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.09.19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 17.

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 யூலை 11 ஆம் திகதிய 2079/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், முத்திரைத் தீர்வை தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 ஒக்டோபர் 01 ஆம் திகதிய 2091/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், முத்திரைத் தீர்வை தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 டிசெம்பர் 31 ஆம் திகதிய 2104/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.1),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 யூலை 10 ஆம் திகதிய 2079/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.2),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 2092/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.3),— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 நவம்பர் 15 ஆம் திகதிய 2097/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 12 ஆம் திகதிய 2079/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 17 ஆம் திகதிய 2080/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 31 ஆம் திகதிய 2082/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 31 ஆம் திகதிய 2082/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய 2083/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்)சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 செப்டம்பர் 17 ஆம் திகதிய 2089/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 7),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 2092/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 30.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 8),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 நவம்பர் 01 ஆம் திகதிய 2095/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 31.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 9),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 நவம்பர் 12 ஆம் திகதிய 2097/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 32.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 மே 31 ஆம் திகதிய 2073/37 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 33.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 14 ஆம் திகதிய 2075/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 34.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 18 ஆம் திகதிய 2080/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 35.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 2082/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 36.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 2083/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 37.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய 2084/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 38.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 2085/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 39.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் பதில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 07 ஆம் திகதிய 2087/76 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 40.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 9),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 17 ஆம் திகதிய 2089/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 41.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 10),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 29 ஆம் திகதிய 2090/47 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 42.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 11),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள்அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 நவம்பர் 01 ஆம் திகதிய 2095/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 43.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 12),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 நவம்பர் 01 ஆம் திகதிய 2095/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 44.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 13),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 நவம்பர் 07 ஆம் திகதிய 2096/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 45.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 14),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 நவம்பர் 23 ஆம் திகதிய 2098/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 46.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 15),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 டிசம்பர் 03 ஆம் திகதிய 2100/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 47.

நிதி அமைச்சர்,— சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்ட, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி சட்டத்தின் 58அ(1) ஆம் பிரிவின் கீழ் சேர்பெறுமதி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 10 ஆம் திகதிய 2088/2 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 48.

நிதி அமைச்சர்,— சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்ட, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 58அ(1) ஆம் பிரிவின் கீழ் சேர்பெறுமதி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 11 ஆம் திகதிய 2088/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 49.

நிதி அமைச்சர்,— சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ் சேர்பெறுமதி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 18 ஆம் திகதிய 2089/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 50.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம்அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2, 12, 22 மற்றும் 25 ஆம் பிரிவுகளின்கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 2091/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 12/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 51.

நிதி அமைச்சர்,— ஸ்ரீலங்கன் விமான கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2016/2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2018.07.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீலங்கன் விமான கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.09.19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 52.

நிதி அமைச்சர்,— மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2016),— பணச் சட்டத்தின் 35(3) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 53.

நிதி அமைச்சர்,— இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2016),— பணச் சட்டத்தின் 35(3) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.12.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 54.

நிதி அமைச்சர்,— பிரதேச அபிவிருத்தி வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— பணச் சட்டத்தின் 35(3) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான பிரதேச அபிவிருத்தி வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 55.

நிதி அமைச்சர்,— அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2017.09.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 56.

நிதி அமைச்சர்,— அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 57.

நிதி அமைச்சர்,— இலங்கை சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2017.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட சுயாதீன கணக்காய்வாளர்களின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2017.09.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 58.

நிதி அமைச்சர்,— இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்கான 1987 இன் 36 ஆம் இலக்கச் சட்டத்தின் 37(2) பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) பிரிவின் கீழ் 2017.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2018.02.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 59.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.03.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2018 யூலை 19 ஆம் திகதிய 2080/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 60.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 61.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 62.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 63.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 64.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 65.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 66.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 67.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 68.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 69.

தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 70.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 71.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 72.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 73.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

74.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

75.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

76.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

77.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

78.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

79.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

80.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

81.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

82.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

83.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

84.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

85.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

86.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் எனும் சட்டமூலத்திற்குக் குழுவில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.